17.03.2026

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 191/2025</u>

அ.சா.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வினோத் | | |
| த/பெ | ரவி | | |
| கிராமம் | ஜானகிபுரம் | தொழில் | காய்கறி வியாபாரம் |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | /2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 17.03.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 சிவகங்கை எனது மனைவியாவார். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அ.சா.2 வெங்கடேசன், அ.சா.3 மஞ்சுளா ஆகியோர்கள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள். எங்களுக்கும், ஆஜர் எதிரிக்கும் எந்தவிதமான விரோதமும் இல்லை. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் சென்னையில் இருந்த போது, என் மனைவி போன் மூலமாக வீடு எரிந்து விட்டதாக தகவல் சொன்னார். எவ்வாறு எரிந்தது என்று அவர் சொல்லவில்லை. எனக்கும் அது குறித்து தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. இது சம்பந்தமாக எனது மனைவி காவல் நிலையம் சென்று தகவல் சொல்லியுள்ளார்.

<u>(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.</u>

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

எங்கள் வீட்டில் நான், என் மனைவி சிவகங்கா, மகன்கள் மோனிஷ், தரணிதரன், மற்றும் சிவகங்காவின் பாட்டி ஆகியோர் வசித்து வருகிறோம் என்றும், எங்கள் ஊரை சேர்ந்த வீரபத்திரன் மகன்கள் மணிபாரதி, வினோத் குமார், மற்றும் சிலர் மீது என் மனைவி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து முன்விரோதம் இருந்தது என்றும், கடந்த 01/06/2023 ம் தேதி மாலை சுமார் 06.30 மணியளவில் வீரபத்திரன் எனது வீட்டிற்கு வந்தார் என்றும், எங்களைப் பார்த்து அசிங்கமாக பேசி எங்கள் மீது பொய் வழக்கு கொடுத்துள்ளீர்களா உங்கள் வீட்டை கொளுத்தி ஊரை விட்டு உங்களை துரத்தி விடுவேன் என்றும், கொலை மிரட்டல் விடுத்து விட்டு சென்றார் என்றும், மஞ்சுளா, பரத் ஆகியோர் சமாதானப்படுத்தி அனுப்பினார்கள் என்றும், பின்பு நாங்கள் அனைவரும் வீட்டிற்குள் தூங்கி விட்டோம் என்றும், மறுநாள் அதிகாலை 03.00 மணியளவில் எங்கள் வீட்டின் பின்புறம் தீப்பற்றி எரிந்தது என்றும், அந்தப் பக்கம் இருந்து நாங்கள் சென்று பார்க்க வீரபத்திரன் அந்த பக்கமாக சென்றார் என்றும், எங்கள் ஊரை சேர்ந்த ரமேஷ், வெங்கடேஷ், அஜித் குமார், பழனி ஆகியோர்கள் வீட்டில் இருந்த பொருட்களை எடுத்து காபந்து செய்தார்கள் என்றும், இது சம்பந்தமாக என் மனைவி விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுத்துக்கொண்டார் என்றும், முதல் நாள் மாலை சொன்னது போல் வீரபத்திரன் தான் என் வீட்டை கொளுத்தி இருக்கக்கூடும் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.

மறுவிசாரணை

இல்லை